Registered as a Newspaper in Srilanka

விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 275 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 03 செவ்வாய்க்கிழமை (20.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


## தியாக தீபம் திலீபன் நினைவேந்தல்

### 15 பேர் கொண்ட பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்



(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்காக 15 பேரைக் கொண்ட பொதுக் கட்டமைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது. 11

## தமிழர்களுக்கு நீதி கோரி ஜெனிவாவில் கவனயீர்ப்பு



(ஜெனிவா)

ஈழத்தமிழர்களுக்கு நேர்ந்த அநீதிகளுக்கு நீதி வேண்டி நேற்றைய 11

# ஐ.நா தீர்மானத்தை ஏற்கப் போவதில்லை

## அது தேவையற்ற ஒன்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படும் தீர்மானத்துக்கு உறுப்பு நாடுகள் ஆதரவு வழங்கினாலும் வழங்காவிட்டாலும் இலங்கை அரசாங்கம் அதனை முற்றுமுழுதாக எதிர்க்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## புதிதாக 96 ஐ.ஓ.சி

### எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

(கொழும்பு)

இலங்கையில் புதிதாக 96 எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஆரம்பிக்கவுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் 11

### தேசிய சபை

## பாராளுமன்றில் இன்று விவாதம்

(கொழும்பு)

தேசிய சபை மீதான பாராளுமன்ற விவாதம் இன்று நடைபெறவுள்ளது.

நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் தேசிய சபையொன்றை ஸ்தாபிப்பதற்கான பிரேரணையை ஆளும் 11

## விடைபெற்றார் மகாராணி



11

## பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக அநுராதபுரத்தில் கையெழுத்து வேட்டை

### மூவின மக்களும் ஒன்றுதிரண்டனர்



(அநுராதபுரம்)

இலங்கையில் மக்களை வதைக்கும் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்று அநுராதபுரம் 11



## பொருளாதார நெருக்கடியை இலங்கை சமாளிக்கும்

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் பொருளாதார நெருக்கடியை இலங்கையால் வெற்றிகரமாக சமாளிக்க முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதமர் குணவர்த்தன, தற்போது நிலவும் நெருக்கடியை சமாளிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார். 11

### ஐ.எம்.எப் உதவி

## நெருக்கடிக்கு தீர்வாகாது

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்த வேளையில் அதிலிருந்து நாடு மீண்டு வருவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் 11

## இலங்கைக்கு உதவ புதிய நன்கொடைத் திட்டம்

### ஐ.நா பிரதிநிதி ஹனா சிங்கர்



(கொழும்பு)

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவும் நோக்கில், நன்கொடைத் திட்டம் ஒன்றை, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்துள்ளது. 11

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு அதிக கடன் வழங்கிய நாடாக சீனாவை பின்னுக்குத்தள்ளி முதலிடம் பிடித்த இந்தியா

(கொழும்பு)

இலங்கைக்கு அதிக கடன் வழங்கிய நாடாக, சீனாவை பின்தள்ளி இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில், 968 மில்லியன் அமெரிக்க டொலரை இந்தியா, இலங்கைக்கு கடனாக வழங்கியுள்ளது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்காக இலங்கைக்கு, இந்தியா அதிகளவான கடனை வழங்கியிருந்ததுடன், மனிதாபிமான உதவிகளையும்வழங்கியிருந்தது.

கடந்த 2017ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரையான காலப் பகுதியில், சீனா இருதரப்பு கடன் உதவியாக 947 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை வழங்கி முதன்மை வகித்திருந்தது.

அதில் 809 மில்லியன் அமெரிக்க டொலர் சீனா அபிவிருத்தி வங்கியின் ஊடாக நாணய பறிமாற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், முதல் 4 மாதங்களில் இந்தியா 968 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கி, இலங்கைக்கான கடன் வழங்கிய நாடுகளின் பட்டியலில் சீனாவை பின்தள்ளியுள்ளது.

இதுதவிர, 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 44 ஆயிரம் தொன் யூரியா உரத்தையும், இந்தியா வழங்கியுள்ளது.

இந்தியாவுடனான நெருங்கிய உறவு மற்றும் நல்லெண்ணம் அடிப்படையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இந்தியாவில் கைதானவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கொழும்பு)

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து இளைஞர்களையும் விரைவில் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த போது இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 69 தமிழ் இளைஞர்களின் உறவினர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீன்பிடித் தொழிலை முன்னெடுத்துச் செல்ல முடியாத காரணத்தினால் அவர்கள் இவ்வாறு வெளிநாடு செல்ல முயற்சித்ததாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 69 தமிழ் இளைஞர்களும் தற்போது பெங்களூர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக வேறு நாடுகளுக்கு செல்வதை ஒருபோதும் ஏற்க முடியாதென சுட்டிக்காட்டிய அமைச்சர், நட்புறவை பயன்படுத்தி கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். (ம-7)

## எதிர்வரும் தேர்தல்களில் அதிரடி காட்டுவோம்

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

"இலங்கையில் அடுத்துவரும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதனை 'மேலவை இலங்கை கூட்டமைப்புபாகவே நாம் எதிர்கொண்டு அதிரடி காட்டுவோம்."

இவ்வாறு மேற்படி கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மேலவை இலங்கை கூட்டமைப்பின் முதலாவது நிறைவேற்றுக்குழுக் கூட்டம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கூறினார். (ம-7)

### ஐ.நா தீர்மான...

முக்கிய நாடுகளின் இணை அனுசரணையுடன் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படும் தீர்மானம், பிளவுபடுத்தும் பொறிமுறை என்பதால், அதனை ஏற்கப் போவதில்லை என அவர் கூறியுள்ளார்.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரைபு தீர்மானம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த அலி சப்ரி, தற்போதைய தருணத்தில் இந்தத் தீர்மானம் தேவையற்ற ஒன்றென கூறியுள்ளார்.

இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் ஆதரவும் ஆசீர்வாதமும் இலங்கைக்கு தேவை என்பதை எடுத்துக்கூறியுள்ளதாக இலங்கையின் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தீர்மானம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை என அமைச்சர் சப்ரி வலியுறுத்தினார்.

இந்த கடமையை நிறைவேற்றும் பணிகள் தொடரும் எனவும் உள்நாட்டு பொறிமுறைக்கு அப்பால், அரசியலமைப்பை மீறும் எந்தவொரு வெளிப்புற பொறிமுறையையும் தாம் தொடர்ந்து எதிர்ப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான புதிய வரைவுத் தீர்மானம், அதிகாரப் பகிர்வு, தேர்தலை நடத்துதல், காணாமல் போனவர்களின் அவல நிலையை நிவர்த்தி செய்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுதல், அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான வன்முறைகளுக்குப் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. (ம-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18.08.2005

உதிர்வு 01.10.2021

யாழ்ப்பாணம், வடமராட்சி கரணவாய் மேற்கு மண்டானைப் பிறப்பிடமாகக் கொண்ட

### அமரர் கணேசன் கிருசிகன்

[ ஹாட்லி கல்லூரி மாணவன் ]

திதி – 20.09.2022 செவ்வாய்க்கிழமை

கனவாகக் கூடாதா உன் மரணமென்று
மனம் தினம் கணகணக்கிறதடா
கடலோடு நீ கரைந்தாலும் கரைசேரா உன் நினைவுடன்
தத்தளித்து தடம்புரண்டே தடுதாறி நிற்கிறோமடா
உன் வெற்றிப் பதக்கங்களும் வெறுமையாய் போனதடா
உன் செல்லச் சிரிப்பும் கள்ளமில்லா கதைகளும்
காதோரம் கேட்கையிலே இதயமும் எரிகிறதடா
நீயற்ற கணங்கள் அர்த்தமற்ற பொழுதுகளாய் கழிந்தாலும்
நம் விழியோரம் வடியும் நீருக்கு பதில் இல்லையடா
விதியை வென்று எம் மனம் ஆற்ற வா மார்க்கண்டேயா...

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் முகம் காண அகம் ஏங்கும் அத்தைமார்கள்.

(12796)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 24.11.1941

இறப்பு 19.08.2022

### கிஷ்ணர் மாணிக்கவாசகர்

( மாவிட்டபுரம் )

சைவசமயத் தொண்டண் கிஷ்ணர் மாணிக்கவாசகர் சைவ சமயத்திற்கு ஆற்றிய பணிகளை நாம் என்றும் மறவோம் அந்தப் பணிகளைச் செய்த மாணிக்கவாசகர் அவர்கட்கு மாவிட்டபுரம், கீரிமலை வீதி, சீமெந்து தொழிற்சாலைக்கு அருகாமையில் ஆலமரச் சோலையில் அமர்ந்த பெரியதம்பிரான் ஆலயத்தில் 20.09.2022 செவ்வாய்க்கிழமை மதியம் 11.00 மணிக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னதான நிகழ்வும் நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும், கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மாலைக் தந்தா போற்றி
அன்னதானக் தந்தா போற்றி
பிட்டியாம் பதியான் போற்றி

திருக்கேதீஸ்வரத்தானே போற்றி
பெரியதம்பிரான் போற்றி
மோட்சம் அடையவேண்டும் போற்றி

இப்படிக்கு
இவர் வழிகாட்டிய தொண்டர்கள்

(C-4948)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாராணி எலிசபெத்தின் இறுதி நிகழ்வுகள்



## குமார் சங்கக்காரவுக்கு சிலை; அனுமதி எதுவும் பெறப்படவில்லை

### யாழ்.பல்கலை நிர்வாகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினுள் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவுக்கு சிலை நிறுவுவதற்காக யாரும் அனுமதி கோரவில்லை என்றும் அவ்வாறான எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை என்றும் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வைக்கப்படுவதற்காக துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக் காரவின் சிலை வடிவமைக் கப்பட்டுள்ளதாக நேற்று திங்கட்கிழமை சமூக ஊடகங்கள் உட்பட ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இது குறித்து பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் உட்பட நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, பல்கலைக்கழகத்தினுள் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவுக்கு சிலை அமைப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சிலை அமைப்பதற்காக எவரும் அனுமதி கோரவில்லை. வளாகத்தினுள் சிலைகளை நிறுவுவதென்பது நீண்ட பொறிமுறைகளைக் கொண்டது. அவ்வாறான அனுமதி எதுவும் வழங்கவில்லை என தெரிவித்தனர்.

குறித்த சிலையானது மன்னாரை சேர்ந்த யாழ்.பல்கலைகழக மாணவனால் உருவாக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (4-33)

## இளைஞன் மீது சரமாரி வாள்வெட்டு

### நவாலியில் சம்பவம்

(குப்பிழான்)

தனது நண்பனின் பிறந்த நாளுக்குச் சென்றுவிட்டு வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவர் மீது யாழ்ப்பாணம் நவாலிப் பகுதியில் வைத்துச் சர்மாரியாக வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் இளைஞன் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-18)

## வடக்கு மீனவர் பாதிப்பு தொடர்பாக நீதிமன்றை நாட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நீதிக்கும் சமாதானத்திற்குமான கனேடியர்கள் அமைப்பினால் வடக்கு மீனவர்கள் பாதிப்புகள் தொடர்பில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது. மீனவர்களையும் கடல் வளங்களையும் அழிக்கின்ற அடிமடி தொழில் போன்ற சட்ட விரோத தொழில்களை கட்டுப்படுத்தும் சட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தாமை தொடர்பிலும் அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நீதிக்கும் சமாதானத்திற்குமான கனேடியர்கள் அமைப்பின் குறித்த செயற்றிட்டத்தின் சட்டத்தரணி நாகானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே சட்டத்தரணி நாகானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் பொருளியல் ஆய்வாளர், செல்வின் வட மாகாண கடற்றொழிலாளர் இணைய தலைவர் கா.அண்ணாமலை மற்றும் நிர்வாகிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் மீனவர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (4-33-316)

## மஹாளய அனுஷ்டானமும் திருவாசக முற்றோதலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நல்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் சிங்காரவேலவன் சிவகாயத்திரி சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதான மஹாளய அனுஷ்டானமும் திருவாசக முற்றோதலும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து விசேட பூஜைகள் நடைபெற்று மகேஸ்வர பூஜையும் இடம் பெறவுள்ளது. (4)

## உச்ச விலைக்கு பால் கொள்வனவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பண்ணையாளர்களின் நலன் கருதி காமதேனு கிளை பால் விற்பனை நிலையங்களில் உச்ச விலைக்கு பால் கொள்வனவு செய்து வருகின்றது.

எனவே பால் உற்பத்தியாளர்கள் 076 832 7961 எனும் தொ. இல அல்லது கிளிநொச்சி பொதுச்சந்தை காமதேனு பால் விற்பனை நிலையத்திலும் அல்லது கரைச் பிரதேச செயலகத்திற்கு முன்பாக உள்ள காமதேனு கிளை நிலையத்திலும் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

## காலபோக செய்கைக்கான பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் 2022/23 ஆம் ஆண்டுகளுக்கான கால போக பொதுக்கூட்டம் நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை வளாகத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற இருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

எனவே குறித்த தினத்தில் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் கூட்டத்திற்கு தவறாது வருகை தருவதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான சந்தாப் பணத்தினை செலுத்தாத விவசாயிகள் குறித்த தினத்தில் அதனைச் செலுத்த முடியும் எனவும் மேலும் அவர் தெரியப்படுத்தியுள்ளார். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜடேஜா இடம்பெறாதது இந்திய அணிக்கு இழப்பு

## மஹேல தெரிவிப்பு




ஐசிசி இருபது- 20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 16 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகிறது.

இந்தத் தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியில் காயம் காரணமாக ஓல்ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா இடம்பெறவில்லை.

இந்நிலையில் அவர், இடம் பெறாதது இந்திய அணிக்கு பெரிய இழப்பு என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மஹேல ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர், ஐசிசி நிகழ்வில் கூறும்போது, உலகக் கோப்பையை ரவீந்திர ஜடேஜா இல்லாமல் எதிர்கொள்வது சவால்தான். இந்திய அணியில் பட்டிங் வரிசையில் 5 ஆவது இடத்தில் ஜடேஜா சரியாக பொருந்தியிருந்தார்.

அவரும், ஹர்திக் பாண்ட்யாவும் பட்டிங் வரிசையில் முதல் 6 இடங்களில் இருப்பது என்பது இந்திய அணிக்கு அதிக நெகிழ்வு தன்மையை கொடுத்தது.

இந்திய அணிக்கு இது கடினமான ஒன்று. இடது கை பட்ஸ்மேன் இல்லாதது கவலையாக இருக்கக்கூடும். இதனால் தினேஷ் கார்த்திக்கை தவிர்த்து விட்டு ரிஷப் பந்த்தை பட்டிங் வரிசையில் 4 அல்லது 5 ஆவது இடத்துக்கு கொண்டுவர யோசிக்கக்கூடும். உலகக் கோப்பைக்கு முன்னதாக இந்த விடயங்களை சரிசெய்ய வேண்டும்.

விராட் கோலி மீண்டும் பார்முக்கு திரும்பி இருப்பதை பார்க்க சிறப்பாக உள்ளது. புத்திசாலித்தனமான வீரர்கள் அனைவரும் உலகக் கோப்பையில் சிறந்த ஃபார்மில் இருக்க வேண்டும். அதுதான் உலகக் கோப்பைக்கும் தகுதியானது. அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை தொடர் சுவாரசியமானதாக இருக்கும் எனவும் மேலும் தெரிவித்தார். (4)

# ஆசிய தடகள தகுதிகாண் போட்டியில் யாழ்.வீரர் சாதனை



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புவிதரன் தேசிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

ஆசிய தடகள போட்டிக்கான தகுதி காண் போட்டியிலேயே அவர் இந்த சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

ஆசிய தடகளப் போட்டிக்கான தகுதிகாண் போட்டி நேற்று முன்தினம் தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் திறந்த வயது பிரிவிற்கான கோலூன்றிப் பாய்தல் தகுதிகாண் போட்டியில் இராணுவ மெய்வல்லுநர் போட்டி வீரராக பிரதிநிதித்துவம் செய்த சிறிகந்த ராசா புவிதரன் 5.15 m பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவராகிய இவர் இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் கோலூன்றிப் பாய்தலில் சாதனைகளை பதிவு செய்துள்ளார்.

இவருக்கான பயிற்சிகளை கணாதீபன் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-90)

# இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய ஜெர்சி அறிமுகம்

8 ஆவது இருபது-20 உலகக் கோப்பை போட்டி ஒக்டோபர் 16 ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய இருபது-20 ஜெர்சியை பி.சி.சி.ஐ.அறிமுகம் செய்துள்ளது.

மொகாலியில் நடைபெறும் முதல் போட்டியில் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்ளும் போது இந்திய அணி இந்த புதிய சீருடையுடன் களம் இறங்குவார்கள். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2701

### கஜலக்சன்

ஆசிரியர் : முடியாது என்பது முட்டாளின் வார்த்தை...



மாணவன் : சார்.. நாங்க இப்ப வீட்டுக்குப் போகணும்... அனுப்ப முடியுமா? முடியாதா?

### கஜானி

மழை, மனைவி - இரண்டிற்கும் என்ன ஒற்றுமை???



ரெண்டுமே இல்லாதப்போ எப்ப வரும்ன்னு ஏங்குவோம்.. வந்தா ஏண்டா வந்ததுன்னு புலம்புவோம்...

### ரதுஷன்

சொந்தம் என்று கூறிக் கொண்டு ஆயிரம் உறவுகள் இருந்தாலும் பணம் என்ற ஒன்று இருந்தால் தான் அந்த ஆயிரம் உறவுகளும் நம்மை மதிக்கும்.



### முல்லை

என்னய்யா உன் கடையில வாங்கின நெய் டப்பாவுல வெறும் கல்லும் மண்ணுமா இருக்கு. யோவ் விளம்பரத்த ஒழுங்கா பாத்தியா? இல்லயைா? மணல் மணலா இருக்கும்னு சொல்லித் தான்யா கொடுத்தோம்.

### பிரஷாந்

கண்டிப்பான அப்பாக்கள் எங்கேயும் கண்டிப்பான தாத்தாக்களாக இருப்பதில்லை.



### சரண்யா

அமைதியான கடல் ஒருபோதும் சிறந்த மாலுமியை உருவாக்காது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய மருந்துகளுக்கு

# பாரிய பற்றாக்குறை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

**(கொழும்பு) —**

**அத்தியாவசிய ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சைகளுக்கான உபகரணங்களுக்கு பாரிய பற்றாக்குறை நிலவுவதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.**

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய்களுக்கான அத்தியாவசிய ஔடதங்களுக்கு அரச மருத்துவமனைகளில் பாரிய பற்றாக்குறை காணப்படுவதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் மாதாந்த மருத்துவ சிகிச்சைகளுக்காக வருகை தரும் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

ஔடத பற்றாக்குறையானது தற்போது தேசிய மருத்துவமனைகளில் மாத்திரமின்றி கிராமிய மருத்துவமனைகளிலும் காணப்படுகின்றது.

அத்துடன் மருந்துகளுக்கான விலையினை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டியது சுகாதார அமைச்சினுடைய பொறுப்பாகும்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ற்றோல் ஆகிய நோய்களுக்காக பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்தபட்ச மருந்துகளான 50 மில்லிகிராம் எடையுடைய லொசாட்டன், மெட்போமின் உள்ளிட்ட மருந்துகளையேனும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள் மருந்துகள் இன்றி வாழக்கூடிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் எனவும் அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார். (நி)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியை
**திருமதி. தயாளனி சிவநாதன்**
அவர்களின் பாசமிகு மாமியார்
அமரர்.
**பொன்னுச்சாமி நாகேஸ்வரி**
அவர்களின் மறைவால் துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன்
அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கல்களையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்

பிறப்பு 12.04.1932
இறப்பு 17.09.2022

(12827)

பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு-19.02.1961 இறப்பு-19.09.2022

எமது பாடசாலைப் பணியாளர்
திருமதி. **கலைச்செல்வி நதீஸ்**
அவர்களின் பாசத் தந்தையார்
திரு. **கந்தையா கந்தசாமி**
அவர்கள் 19.09.2022 அன்று
இறைவனடி சேர்ந்தமையையிட்டு
பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(12826)



பிரிவால் துயருறும்
ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ஏறாலை மகா வித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி. **கமலாவதி சுரேஸ்குமார்** அவர்களின்
அன்புத் தாயாரும் கல்லூரியின் பழைய மாணவர்
சங்கத்தின் பொருளாளரான திரு. **சின்னத்துரை
சுரேஸ்குமார்** அவர்களின் பாசமிகு மாமியாருமான
அமரர். திருமதி.
**கந்தசாமி நல்லநாயகி**
அவர்கள் 18.09.2022 அன்று காலமாகியதையிட்டு
அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(12825)

ஆசிரியர் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.


# இராசிபலன்

20.09.2022
புரட்டாதி 03, செவ்வாய்க்கிழமை
தசமி முன்னிரவு 10.07 மணிவரை

புனர்பூசம் முன்னிரவு 10.37 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை

சந்திராஷ்டமம் - கேட்டை, மூலம்

**வளவன்**




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம். காணும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.




அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும்.




அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.




குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சிறப்பான நாள்.




திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும்.




தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும்.




உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், தொழிலில் இருந்த குழப்பங்கள் அகலும், சுணங்கிய காரியங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.




கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பழைய பிரச்சினையைத் தீர்க்க முழுமூச்சுடன் செயற்படுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.




பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு.




மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் பண உதவிகள் கிடைக்கலாம்.

**உணர்வு வேகமுள்ளது, அறிவு விவேகமுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

### கீர்த்தி சிம்மன் கதை

(நேற்றைய தொடர்ச்சி)

அதில் உள்ளது என்றால் அப்பொம்மைக்குள் உள்ளது என்பதே. இதைப் புரிந்து கொண்டே இதனை நான் சரஸ்வதி பொம்மையிலிருந்து எடுத்தேன்" என்றான்.

அது கேட்டு மூவரும் "பேஷ் பேஷ்" என்று கூறிச் சக்தி சேனையைப் பாராட்டினார்கள். அப்போது சுசேனன் "ஜெயசேனா! நம் பந்தயம் நினைவிருக்கிறதா?" என்று கேட்டான். அது கேட்டு சக்திசேனை வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டாள்.

இங்கு இப்படி யாவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி இருக்கையில் காம்போஜ மன்னனும் நாகதேச அரசனும் சாக்கிய மன்னனும் கவலையில் ஆழ்ந்தார்கள்.

தாம் அனுப்பிய ஆட்கள் கொல்லப்பட்டது அவர்களுக்குத் தெரிந்தது. அது மட்டுமல்ல கீர்த்தி சிம்மனுக்கு முத்து மாலை கிடைத்ததோடு தேவியின் தரிசனமும் அருளும் கிடைத்தது என்பதும் அவர்களுக்குத் தெரிந்தது.



கீர்த்திசிம்மனுக்கும் சக்திசேனைக்கும் விவாகம் விரைவில் நடக்கப் போகிறது என்றும் அதற்கு தடபுடலான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்பதையும் ஒற்றர்கள் வாயிலாக அவர்கள் தெரிந்து கொண்டார்கள்.

அப்போது நாக கர்ணன் மற்றவர்களிடம் "இதுதான் சரியான சமயம்: இப்போது கோசல நாடு ஒரேயடியாக மகிழ்ந்து கொண்டிருக்கிறது. கீர்த்தி சிம்மனின் விவாக ஏற்பாடுகளில் மூழ்கி இருக்கிறது. இப்போது நாம் படையெடுத்துப் போனால் கோசலத்தை எளிதில் வென்று விடலாம்" என்றான். மற்ற இருவரும் "சரி அப்படியே செய்வோம்" என உற்சாகம் அடைந்தவர்களாகக் கூறினார்கள்.

ஆனால் அவர்களுக்குத் தெரியாத ஒரு விடயம் கோசலமும் படை எடுப்பிற்கான ஏற்பாடுகளை இரகசியமாகச் செய்துவிட்டது என்பதே. அது இரகசியத் திட்டம். அதன்படி அந்த மூன்று மன்னர்களும் படை எடுத்து வருமுன் தனித்தனியாக அம்மூவரையும் அவர்கள் எதிர்பாராத விதத்தில் தாக்குவதுதான் அது. அதன்படி கீர்த்தி சிம்மன் தானே ஒரு பெரும் படைக்குத் தலைமை தாங்கி திடீரெனக் காம்போஜ நாட்டைத் தாக்கி அதன் மன்னனைச் சிறைப்பிடித்தான்.

(தொடரும்)

## சிலப்பதிகாரம்

### கள்வனின் நிம்மதி பெருமூச்சு

#### விதியின் சமிஞ்சை




அதனால் அவர்கள் வீட்டுக்கு வரும் போது கூட புன்சிரிப்போடு தான் அவர்களை உபசரிப்பேன். உங்கள் விருப்பம் என்னவோ அதற்கு ஏற்றவாறு என்னை மாற்றிக் கொள்வதில் எனக்கு சந்தோசம்தான். அதில் எனக்குக் கஷ்டமே இல்லை. அதனால் தான் நீங்கள் கூப்பிட்டவுடன் புறப்பட்டேன்.

கோவலன் எழுந்தான் சரி உன்னுடைய கால் சிலம்புகளில் ஒன்றைக் கொடு. நான் அதை நல்ல விலைக்கு விற்று நம்முடைய வியாபாரத்துக்குத் தேவையான முதலுடன் திரும்பி வருகிறேன். நான் வருகிறவரைக்கும் நீ வருத்தப்படாமல் சந்தோஷமாகக் காத்திரு என்றான்.

இதைச் சொன்ன போது கோவலன் மிகுந்த வருத்தத்தில் இருந்தான். கண்ணகியை விட்டுச் செல்லவே அவனுக்கு மனம் இல்லை. முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் குழந்தைபோலப் புறப்பட்டான்.

கோவலனுக்குச் சகுனங்களில் நம்பிக்கை இல்லை இருந்திருந்தால். அவன் புறப்படும் போது எதிரில் துள்ளி ஓடிய எருமையைக் கெட்ட சகுனமாக எண்ணியிருப்பான்.

கையில் சிலம்புடன் தெருவில் நுழைந்த கோவலனைப் பார்த்தும் அந்தப் பொற்கொல்லனுக்க சந்தோசம் ஏற்பட்டது. அப்பாடா நான் பிழைத்தேன் என்று நிம்மதியோடு நினைத்துக்கொண்டான். கோவலனைப் பார்த்தவுடன் அவன் ஏன் நிம்மதி அடைய வேண்டும்?

இரண்டு நாட்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் அது. நினைக்கிற போதெல்லாம் அவனுக்கு மரண பயத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது. மதுரை அரசியின் ஆபரணங்கள் சிலவற்றுக்குக் கொக்கிகள் சேதமடைந்திருந்தன. பதக்கங்கள் கழன்று போயிருந்தன.

ஆகவே அரண்மனைக்காரர்கள் அவனை அழைத்திருந்தார்கள். எல்லாம் விலை உயர்ந்த நகைகள் என்பதால் அரசியின் அறையிலேயே உட்கார்ந்து சரி செய்யச் சொன்னார்கள்.

அவனும் பொறுப்பாக வேலையைச் செய்ய ஆரம்பித்தான் அவன் கண்கள் அந்த அறையை அங்குலம் அங்குலமாக அளந்தன.

என்ன செழிப்பு!

அரசர்கள் உட்காரும் சிம்மாசனம் போல வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்ட கட்டில், விலை உயர்ந்த ஆடைகள், அலட்சியமாக இறைக்கப்பட்டிருந்த தங்க வைர நவரத்தின நகைகள், தண்ணீர் குடிக்கத் தங்கக் கிண்ணம் காலணிகளில் வைரம்....

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 80

பெட்ரோ போரோஷென்கோ கூட்டணி தேசிய மட்டத்தில் 3,437,521 (21.82%) வாக்குகளைப் பெற்று தேசிய மட்டத்தில் 63 ஆசனங்களையும் தொகுதி வாரியாக 69 ஆசனங்களையும் கைப்பற்றி முதல் இடத்தைப் பெற்றது. மக்கள் முன்னணி கட்சி தேசிய மட்டத்தில் 3,488,114 (22.14%) வாக்குகளைப் பெற்று 64 ஆசனங்களையும் தொகுதி வாரியாக 18 ஆசனங்களையும் பெற்று இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியது. எல்லாமாக 6 கட்சிகள் தேசிய மட்டத்தில் ஆசனங்களைப் பெற்றன. தொகுதிவாரியாக 10 கட்சிகள் ஆசனங்களைப் பெற்றன. 96 சுயேட்சைகள் தொகுதிவாரியாக வெற்றி பெற்றன.

புதிய பாராளுமன்றத்தின் பணிகள் 27 நவம்பர் 2014 அன்று தொடங்கியது. அதேநாளில், ஐந்து கட்சிகள் சேர்ந்து 302 பிரதிநிதிகளைக் கொண்ட "ஐரோப்பிய உக்ரைன்" கூட்டணியை பாராளுமன்றத்தில் உருவாக்கின. அவை பெட்ரோ போரோஷென்கோ கூட்டணி, மக்கள் முன்னணி, சுயசார்பு கட்சி, தீவிர கட்சி மற்றும் தாய்நாடு கட்சி ஆகும். இதையடுத்து 341 வாக்குகள் வித்தியாசத்தில் அர்செனி யாட்சென்யுக் பிரதமராக பதவியேற்றார். 2014 டிசெம்பர் 2 அன்று, இரண்டாவது யாட்சென்யுக் அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்டது. உக்ரைனிய பாராளுமன்றத்தின் 288 உறுப்பினர்கள் அமைச்சரவையின் அமைப்புக்கு ஒப்புதல் அளித்தனர்.

உக்ரைன் பிரதம மந்திரிகள்



யாட்சென்யுக் 2014-2016 | க்ரோய்ஸ்மேன் 2016-2019

தீவிரக் கட்சி 2015 செப்டம்பர் 1 அன்று கூட்டணியில் இருந்து வெளியேறியது. 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் தாய் நாடு கட்சி மற்றும் சுயசார்பு கட்சி கூட்டணியை விட்டு வெளியேறிய பிறகு, கூட்டணிக்கு 226 பேர் தேவைப்பட்டதில் 5 பிரதிநிதிகள் குறைவாக இருந்தனர்.

10 ஏப்ரல் 2016 அன்று பிரதம மந்திரி யாட்சென்யுக் இராஜினாமா செய்வதாக அறிவித்தார். 14 ஏப்ரல் 2016 அன்று யாட்சென்யுக்கிற்குப் பதிலாக புதிய பிரதம மந்திரி வோலோடிமிர் க்ரோய்ஸ்மேன் நியமிக்கப்பட்டார். இதனால் வோலோடிமிர் க்ரோய்ஸ்மேன் அரசாங்கம் உக்ரைனின் அடுத்த அமைச்சரவையை அமைத்தது.

**புதிய பாராளுமன்றத்தின் பணிகள் 27 நவம்பர் 2014 அன்று தொடங்கியது. அதே நாளில், ஐந்து கட்சிகள் சேர்ந்து 302 பிரதிநிதிகளைக் கொண்ட "ஐரோப்பிய உக்ரைன்" கூட்டணியை பாராளுமன்றத்தில் உருவாக்கின.**

குறிப்பு- இந்தத் தேர்தலுக்குப் பதிலாக, பிரிவினைவாதிகள் தம்மால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் நவம்பர் 2 அன்று "டான்பாஸ் பொதுத் தேர்தல்கள்" என்று அழைக்கப்படும் தேர்தல் ஒன்றை நடத்தினர். இது மின்ஸ்க் ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். இத் தேர்தல் உலக சமூகத்தால் அங்கீகரிக்கப்படவில்லை.

**இந்தத் தேர்தலுக்குப் பதிலாக, பிரிவினைவாதிகள் தம்மால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் நவம்பர் 2 அன்று "டான்பாஸ் பொதுத் தேர்தல்கள்" என்று அழைக்கப்படும் தேர்தல் ஒன்றை நடத்தினர். இது மின்ஸ்க் ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். இத் தேர்தல் உலக சமூகத்தால் அங்கீகரிக்கப்படவில்லை.**

### விமானப் பேரிடர், உக்ரைன் (2014) மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் 17

மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் 17 (MH17 என்றும் அழைக்கப்படுகிறது) என்பது ஜூலை 17, 2014 அன்று கிழக்கு உக்ரைனில் விபத்துக்குள்ளாகி எரிந்த பயணிகள் விமானம் ஆகும். விமானத்தில் இருந்த 298 பேரும், அவர்களில் பெரும்பாலானோர் நெதர்லாந்து குடிமக்கள், விபத்தில் இறந்தனர். டச்சு விசாரணையில், விமானம் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து வான்வழி ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக உறுதி செய்யப்பட்டது.

இவ் விபத்து மலேசியன் ஏர்லைன்ஸைப் பொறுத்தவரை, மார்ச் 8 அன்று 370 விமானம் காணாமல் போனதைத் தொடர்ந்து ஏற்பட்ட 2014 ஆம் ஆண்டின் இரண்டாவது பேரழிவாகும்.

MH17 என்பது ஆம்ஸ்டர்டாமில் இருந்து மலேசியாவின் கோலாலம்பூருக்கு வழக்கமாக திட்டமிடப்பட்ட 11 ½ மணி நேர விமானமாகும்.

(தொடரும்)

# உணவுப் பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை 4 ஆம் இடத்தில்

(கொழும்பு)

**உலகில் உணவுப் பணவீக்கம் அதிகம் உள்ள 10 நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளதாக உலக வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.**

இலங்கையில் உணவுப் பணவீக்கம் 91 சதவீதமாக உள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 2021 முதல் ஓகஸ்ட் 2022 வரை, 53 நாடுகளில் உணவுப் பாதுகாப்பு குறித்த புதிய அறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது.

2021 செப்டெம்பர் மாதத்தில் இலங்கையில் உணவுப் பணவீக்கம் 9.9 சதவீதமாக இருந்ததுடன் கிட்டத்தட்ட ஒரு வருடத்தில் 90.9 சதவீதமாக பத்து மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து உணவுப் பணவீக்கம் வேகமாக அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக உணவுப் பணவீக்கம் உள்ள நாடுகளின் பட்டியலில் சிம்பாவே முதலிடத்தில் உள்ளது.

லெபனான் மற்றும் வெனிசுலா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

துருக்கி, ஈரான், ஆர்ஜென்டினா, மோல்டோவா, எத்தியோப்பியா, ருவாண்டா ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் முதல் 10 இடங்களில் உள்ள மற்ற நாடுகள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கோரி பட்டங்கள் பறக்கவிட்டு கவனயீர்ப்பு

(மட்டக்களப்பு)

'வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 50 ஆவது நாளையிட்டு மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் நேற்று திங்கட்கிழமை பட்டங்கள் பறக்க விட்டு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்ற 100 நாள் போராட்டத்தின் 50 ஆவது நாள் போராட்டத்தையிட்டு 8 மாவட்டங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த போராட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பல கோரிக்கையடங்கிய வாசகங்கள் கொண்ட பட்டங்கள் தயார்படுத்தப்பட்டு அதனை பறக்க விட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி)

# 5 வருடங்களில் நாட்டை மீட்டெடுக்கலாம்- ராஜித

(கொழும்பு)



நாட்டை பழைய நிலைமைக்கு கொண்டுவர 10 வருடங்கள் எடுக்கும் என சிலர் கூறினாலும் ஐந்து வருடங்களில் அதனைச் செய்ய முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

உணவு, மருந்து மற்றும் பால்மாவைத் தவிர மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் உள்ளன என்றும் அவற்றை மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பணியில் ஜனாதிபதிக்கு உதவ தாங்கள் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 18.09.2022 - 17.10.2022

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**உழைப்பின் மூலமே உன்னத வாழ்வை அடைய முடியுமென்று சொல்லும் மேஷ இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் தன ஸ்தானத்திலும் விரயாதிபதி குரு விரய ஸ்தானத்திலும் இருப்பதால் தேவைக்கேற்ற பணம் வந்து சேரும்.

## எடுக்கும் புது முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்!

**கன்னி - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். புரட்டாதி 8 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் அவர், அங்கு நீச்சம் பெறுகிறார். சுக்கிரன் வலிமை இழப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. கொள்கைப் பிடிப்போடு செயற்பட முடியாது. இந்த காலகட்டத்தில் விழிப்புணர்வு தேவை. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு குறையலாம்.

எடுக்கும் புது முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம். இருப்பினும் நீச்சம் பெற்ற சுக்கிரன் மீது, மீனத்தில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பதிகிறது. எனவே கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடி விடும். குருவிற்கான பரிகாரங்களைச் செய்யுங்கள்.

**கன்னி - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், புரட்டாதி 16 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கிறார். அது அவருக்கு உச்ச வீடு. விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். கடன் சுமை குறையும். உற்றார், உறவினர்கள் உங்கள் மீது சுமத்திய வீண்பழி அகலும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும். "பல முறை முயற்சித்தும் வேலை கிடைக்கவில்லையே" என்று ஆதங்கப்பட்டவர்களுக்கு நல்ல வேலை அமையும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்வீர்கள்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

புரட்டாதி 22 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிநாதன் மற்றும் அஷ்டமாதிபதியாக விளங்கும் செவ்வாய் 3 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். முக்கியப் புள்ளிகள் உங்களுக்கு வழிகாட்டுவர். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்தில் உள்ளவர்களின் பழக்கம் ஏற்படும். வழக்குகள் சாதகமாகலாம். அதே நேரத்தில் செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிகிறது. பெரிய பாதிப்புகள் இருக்காது. நினைத்தது நிறைவேறாவிட்டாலும் நடப்பது நன்மையாகவே அமையும்.




**சனி வக்கிர நிவர்த்தி**

புரட்டாதி 23 ஆம் திகதி, சனி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு தொழில் மற்றும் இலாபாதிபதியாக விளங்கும் சனி, வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுவதால் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பணி நிமித்தமாக பிரிந்திருந்த கணவன்-மனைவிக்கு, ஒரே இடத்தில் பணிபுரியும் வாய்ப்பு உருவாகும். இம்மாதம் நவராத்திரி நாட்களில் பராசக்தியை வழிபட்டால் நற்பலன்களை அதிகம் பெறலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாத முற்பகுதியைக் காட்டிலும் பிற்பகுதியில் கவனம் தேவை. குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவச் செலவுகளை மேற்கொள்வீர்கள். கணவன் - மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலம் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் படிப்பிற்கேற்ற வேலையும் எதிர்பார்த்த ஊதியமும் கிடைக்கும். சனியின் வக்கிர நிவர்த்தி வரை பொறுமையாக இருப்பது நல்லது. ஊதிய உயர்வு வருவதில் இருந்த தாமதம் அகலும்.



**மற்றவர்களின் உணர்வுகளை மதிக்கும் உன்னத குணம் பெற்ற ரிஷப இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன், தனாதிபதி புதனோடு இணைந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இதனால் "புத சுக்கிர யோகம்" ஏற்படுகிறது. எனவே பொருளாதார விருத்தி அதிகரிக்கும்.

## நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்!

**கன்னி - சுக்கிரன் சஞ்சாரம்**

புரட்டாதி 8 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் சுக்கிரன், அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசி நாதனும் 6 இற்கு அதிபதியுமான சுக்கிரன் நீச்சம் பெறுவதால், ஆரோக்கிய குறைபாடு ஏற்படலாம். ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. தொழிலில் மந்த நிலை ஏற்படும். பங்குதாரர்கள் விலக நேரிடலாம். இல்லத்தில் இதுவரை தடைப்பட்டு வந்த சுப காரியங்கள் நடைபெறும். உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கும்.

**கன்னி - புதன் சஞ்சாரம்**

புரட்டாதி மாதம் 16 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் புதன், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம் பெறுவது நன்மைதான். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். குடும்பப் பிரச்சினை படிப்படியாகத் தீரும். கொடுக்கல் - வாங்கலில் நிறைவு ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

புரட்டாதி 22 ஆம் திகதி, மிதுன இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், 2இல் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வரலாம். விரயங்கள் அதிகரிக்கும் என்பதால், அதனை சுபவிரயங்களாக மாற்றிக் கொள்ளுங்கள். துணிவும் தன்னம்பிக்கையும் தேவைப்படும். தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடுகள் அவசியம். மிதுனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், மகரத்தில் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கிறார். இதனால் தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படலாம். பூர்வீகச் சொத்து பிரச்சினை அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. கொடுக்கல் -வாங்கல்களில் கவனம் தேவை.




**சனி வக்கிர நிவர்த்தி**

புரட்டாதி 23 ஆம் திகதி, சனி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி, வக்கிர நிவர்த்தியாவது யோகம்தான். தொழில் வளர்ச்சியில் இருந்த குறுக்கீடு அகலும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். அண்ணன் - தம்பிக்குள் இருந்த உரசல்கள் மாறும். எண்ணங்கள் அனைத்தும் படிப்படியாக நிறைவேறும். தொழிலுக்கான புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். சொத்து மற்றும் வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. இம்மாதம் வராஹி வழிபாடு வளர்ச்சியைக் கொடுக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் வரவு திருப்தி தரும். சுப விரயங்களும் அதிகரிக்கும். கணவன் - மனைவி உறவு பலப்படும். உங்கள் பெயரிலேயே இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. பூர்வீக சொத்து விற்பனையால் இலாபம் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி, வேலைவாய்ப்புகள் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். சனியின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் உதவி செய்யாதவர்கள்
பிறர் உதவியை எதிர்பார்க்க முடியாது.
- ஈசாப்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அடித்து திருத்திய ஆசிரியரை சட்டம் தண்டித்தபோது...

என்னை இந்த உலகுக்கு தந்தவர்கள் என் பெற்றோர்கள். இந்த உலகை எனக்குக் காட்டித் தந்தவர்கள் என் ஆசான்கள் என்றார் மகா அலெக்சாண்டர்.

ஆம், ஆசிரியர்கள் அறிவொளியை ஏற்றுகின்ற பெருந்தகைகள்.

அதனால்தான் 'குருவில்லா வித்தை பாழ்' என்று நம் தமிழ்மொழி இடித்துரைத்துள்ளது.

ஆக, மாணவர்களை செம்மைப்படுத்த அவர்களைச் சிறந்த மனிதர்களாக ஆக்குகின்ற சிற்பிகளாக ஆசிரியர்களே உள்ளனர்.

ஒரு காலத்தில் குருகுலக்கல்வி முறைமை நடைமுறையில் இருந்தபோது குரு வாழுகின்ற ஆச்சிரமங்களில் சீடர்கள் தங்கியிருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்து வித்தைகளைக் கற்றுக் கொண்டனர்.

கால அசைவில் - அறிவியலின் மேலெழுகையால் குருகுலக் கல்வி முறைமை மெல்ல மெல்ல விடைபெற்று பாடசாலைக் கல்வி முறை அறிமுகமாயிற்று.

பாடசாலைக் கல்வி என்றதும் நவீன பாடசாலைகளே மாணவர் சமூகத்துக்கு நினைவுக்கு வருவதாக இருக்கும்.

ஆனால் பாடசாலைக் கல்வியின் அறிமுகம் என்பது திண்ணைப் பள்ளியாக, ஓலைகளால் வேயப்பட்ட கொட்டில்களாக இருந்து காலப்போக்கில் அவை கட்டட வசதி கொண்ட வகுப்பறைகளாக மாறின.

இப்போது நவீன தகவல் தொழில்நுட்பங்களை உள்ளீர்ப்புச் செய்த குளிரூட்டப்பட்ட அறைகளில் பாடசாலைக் கல்வி உச்சம் பெற்றுள்ளது.

அதிலும் எங்கள் மண்ணில் மேலைத்தேய சட்ட திட்டங்களும் அவர்களின் வாழ்வியல் முறைகளும் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட, மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற எங்கள் பண்பாட்டு மகத்துவம் வேரறுந்து போயிற்று.

ஆம், அன்று ஆசிரியர் மாணவரைத் கண்டித்தார். தண்டித்தார். அதனால் வாழ்வியல் முறைகளை மாணவன் பயபக்தியோடு கற்றுக் கொண்டான்.

அவ்வாறு கற்றுக்கொண்ட மாணவன் தன் பெற்றோர்களை மதித்தான்.

அவர்களைத் தெய்வமாகப் போற்றி சபை சந்திகளில் முன்னிலைப்படுத்தி அவர்களின் ஆசியைப் பெற்றான்.

அதேபோல தனக்குக் கற்பித்த ஆசானைக் கடவுளாக மதித்தான்.

தன்னை அடித்துப் படிப்பித்த ஆசானாலேயே இத்துணை உயர்வு தனக்குக் கிடைத்ததென்பதை திரிகரண சுத்தியோடு நினைத்தான்.

ஆனால் இன்று அவை மலையேறிற்று.

ஆம், மாணவரைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் தடை வந்தது. அதனை மீறினால் ஆசிரியருக்குத் தண்டனை என்று சட்டம் வந்தது. ஆசிரியன் கூண்டில் ஏற்றப்பட்டான்.

அந்தோ! பெற்றோர்களை மதியாத - ஆசிரியர்களை கனம் பண்ணாத மாணவ சமூகம் படைக்கப்பட்டுவிட்டது. இதன் விளைவு பாடசாலைகளில் போதைவஸ்து பாவனை என்றாயிற்று.

ஆனாலும் மாணவரைத் தண்டித்தால் ஆசிரியர் கூண்டில் நிறுத்தப்படுவார் என்பதால்,

அதோ! எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்ற பாராமுகத்தோடு ஆசிரியப் பணி தொடர்கிறது.

இறைவா! மாணவர் மத்தியில் போதைப் பொருள் பாவனை எங்குபோய் முடியுமோ எப்படியாகுமோ யாரறிவார் அச்சோவே.

# போதைப்பொருள் பாவனை வடக்கில் துரிதமாக அதிகரிப்பு

## யாழ். போதனா அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் பாவனையும் அது தொடர்பான சமுதாய சீர்கேடுகளும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களைப் போன்று வடமாகாணத்திலும் துரிதமாகப் பரவிவருவது அண்மைய நாட்களில் மிக வேதனையுடன் அவதானிக்கப்படுகிறது என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேய இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

போதைப் பொருள் பாவனை பாடசாலைகளினுள் மாத்திரமன்றி வைத்தியசாலைகள் வளாகங்களினுள்ளும் உள்நுழைய தொடங்கி உள்ளது.

காலத்தில் தனிமனித ஒழுக்கத்திலும் நற்பண்புகளிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு முன்னுதாரணமாய்த் திகழ்ந்த வடபிரதேசம் இன்று போதை அரக்கனின் கோரப்பிடியில் சிக்குண்டு தனது சுயத்தையும் மாண்புகளையும் இழந்து நிற்கின்றது.

போதைப்பாவனையின் நேரடி மற்றும் மறைமுக விளைவுகளால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது.

உடல்ரீதியான பாதிப்புக்களுக்கு மேலதிகமாக உளரீதியான மற்றும் சமூக ரீதியான பாதிப்புக்கள் நீண்டகாலத் தாக்கத்தை ஏற்படுத்த வல்லதாய் உணரப்படுகின்றன.

போரினால் சிதைவடைந்த வட இலங்கையின் மீள் உருவாக்கத்தின் ஆன்மாவாய் கருதப்படும் இளம் சமுதாயம் போதையின்பால் அடிமையுண்டு தானும் அழிந்து தன் நாட்டையும் அழிவிற்குட்படுத்துவது வேதனையின் உச்சம். போதையுடன் தொடர்புடைய குற்றங்களில் நாளாந்தம் அடையாளப்படுத்தப்படும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை நாளைய பிரளயத்தை கட்டியம் கூறி நிற்கின்றது.

இது நாம் விரைந்து செயற்படவேண்டிய தருணம். போதைப்பொருள் பாவனைக்கு எதிரான பரந்துபட்ட கட்டமைப்பை உருவாக்கி விழிப்புணர்வை ஏற்படுத்துவது எமது அனைவரினதும் கடமையாகும்.

போதைப்பொருள் பாவனையை தடுத்தல் என்பது தனியே போதைப் பொருள் பாவனையாளர்களை இனங்கண்டு சிகிச்சை அளிப்பதுடன் முடிந்து விடுவதில்லை.

போதைப்பொருள் நுகர்வோரை இனங்காணுதல், அவர்களுக்கு சிகிச்சை அளித்தல், அவர்கள் மீண்டும் தமது பழைய வாழ்க்கைக்குத் திரும்புவதை உறுதிசெய்தல், மீளவும் போதைப் பழக்கத்துக்குட்படாத வகையிலான அகப்புறச் சூழ்நிலைகளை உருவாக்குதல் மற்றும் தொடர் கண்காணிப்பு வலையமைப்பை ஏற்படுத்துதல் உள்ளடங்கலான ஓர் பல்பரிமாணப் பொறிமுறையாகும்.

இப் பொறிமுறைகளை உருவாக்கி வெற்றிகரமாகச் செயற்படுத்துவதன் மூலம்மாத்திரமே போதைப் பொருள் பாவனைக்கு எதிரான நிலைபேறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

இதனை நிறைவேற்றுவதில் வைத்தியர்களாகிய எமக்குள்ள தார்மீகக் கடமையை உணர்ந்துள்ள நாம், தனியே சிகிச்சை அளிப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது ஏனைய அனைத்துப் பொறிமுறைகளினூடும் எமது நேரடியான பங்களிப்பை நல்குவதென்னும் தீர்க்கமான முடிவினை மேற்கொண்டுள்ளோம்.

இதற்கு அனைத்து பொறுப்புமிக்க அதிகாரிகள், பெற்றோர் பொதுமக்கள் மற்றும் ஊடகத் துறையினரின் மேலான ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (ம-7.33)

# திலீபன் நோக்கம் நிறைவேறுவதற்கான நினைவேந்தல் தளம் அமையவேண்டும்

## யாழ். மறை மாவட்ட குரு முதல்வர்

(யாழ்ப்பாணம்)

திலீபனின் நோக்கம் நிறைவேறுவதற்கான ஒரு தளமாக திலீபனின் நினைவேந்தல் இடம் பெறும் என யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் தெரிவித்தார்.

திலீபனின் நினைவேந்தலை நடத்துவது தொடர்பில் நேற்று நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் எதிர்வரும் 26 ஆம் திகதி நினைவு கூறப்படவுள்ளது தமிழ் மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே குடும்பமாக இணைந்து எவ்வாறு சிறப்பாக நினைவேந்தலை செய்வது பற்றிய ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

அந்த நினைவு கூரலை செய்வதற்கான ஏற்பாட்டு குழுவினை தேர்வு செய்து இருக்கிறோம்

அந்த ஏற்பாட்டுக் குழுவில் மதத் தலைவர்கள் பல்கலைக்கழக மாணவர்களின் பிரதிநிதிகள் முன்னாள் போராளிகள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மாவீரர்களின் பெற்றோர்களுடைய பிரதிநிதிகள் உள்ளடக்கிய 15 பேர் கொண்ட குழுவினை இன்று ஏற்படுத்தி இருக்கின்றோம்.

இந்த 15 பேரும் நாங்கள் ஒன்று சேர்ந்து தியாக தீபனுடைய நினைவேந்தலினை எவ்வாறு எந்த விதமான கலங்கமும் இல்லாது ஒற்றுமையாக எல்லா மக்களும் இணைந்து எந்த நோக்கத்திற்காக அவர் தன்னுடைய உயிரை தியாகம் செய்தாரோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்கான ஒரு தளமாக இந்த நினைவேந்தலை ஏற்பாடு செய்து நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றோம் என்றார். (ம-7.33)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** பெரிய பொக்கணை, வாதரவத்தை அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரா என்ரபிறைசஸ், எவர் கிறீன் அச்சகம், கரிகணன் பிறைவேட் லிமிடெட், அரசடி வீதி சீனியர் வீதி சந்தி, ஐயனார் கோவிலடி, கலட்டி பிறவுண் வீதி மனோகரா நாவலர் வீதி, மாவடி, தட்டாதெரு, கேகேஎஸ் வீதி ஆகிய இடங்களிலும **மன்னார் பிரதேசத்தில்** எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம், கடற்படை முகாம்- ஓலைத்தொடுவாய், புதிய சில்கக் றோடு அகுடிக் கம்பெனி பிறைவேட் (லிமிடெட்) (கடலுணவுக் களஞ்சியம்), கொன்னையன் குடியிருப்பு, மாலுவாடிச் சந்தி ஓலைத் தொடுவாய், சணி கிராமம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தோட்டவெளி **வவுனியா பிரசேத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக், மறக்கறம்பளை- கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# உலக உணவுத் திட்ட அறிக்கை மறைக்கப்பட்டுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

இந்நாட்டில் 63 இலட்சம் பேர் உணவு பற்றாக் குறையை எதிர்நோக்குவதாக தெரிவித்து உலக உணவு திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையை விவசாய அமைச்சர் மறைத்து செயற்படுகின்றார் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக தாம் ஒரு போதும் கூட்டு அரசாங்கத்தினை அமைக்கப்போவதில்லை.

அது மாத்திரமின்றி மக்களின் ஆணையை பெற்றுக்கொண்டு ஒருபோதும் அதனை காட்டிக்கொடுக்கும் திட்டங்களை முன்னெடுக்கப்போவதில்லை எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பேரிடர் முகாமைத்துவத்திற்கான ஆசிய பசுபிக் கூட்டமைப்பின் வருடாந்த சர்வதேச கருத்தரங்கு



(கொழும்பு)

இலங்கையின் பேரிடர் முகாமைத்துவத்திற்கான ஆசிய பசுபிக் கூட்டமைப்பு தனது வருடாந்த சர்வதேச கருத்தரங்கை இம்முறை நடத்தியுள்ளது.

நாட்டில் நிலவும் பிரச்சினைகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் செயற்படுத்தக்கூடிய சாதகமான வாய்ப்புகளை முன்னிலைப்படுத்தி "புதுமையான மீட்சியை நோக்கிய கூட்டணியின் சக்தியைத் திறத்தல்" என்ற கருப்பொருளின் கீழ் குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முன்னணி பிரமுகர்கள் மற்றும் சர்வதேச வல்லுநர்கள் ஒன்றிணைந்து கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுக்கோசி ஹிடியாகி தனது தலைமை உரையில், ஆசிய பசுபிக் கூட்டமைப்பானது இலங்கையில் மட்டுமல்லாது பல ஆசிய நாடுகளிலும் பேரிடர் முன்னெச்சரிக்கையை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டு வரும் அயராத முயற்சிகளுக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70 ஆண்டுகால நிறைவானது இரு நாட்டு அரசுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கு பங்களிக்கும் எனவும் கூறினார். (4)

## நீர்வேலியில் சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரையினை தொடர்ந்து சைவப் புலவர் சி.கா. கமலநாதனின் "பிதிர் வழிபாட்டு மகிமை" என்னும் விடயப் பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (4)

## மோ.சைக்கிள் திருட்டு

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி புதிய சந்தைப் பகுதிக்கு அருகாமையிலுள்ள ஸ்ரூடியோவிற்கு நபர் ஒருவர் சென்றபோது தலைக்கவசத்தையும் திறப்பினையும்கழற்றாமல் சென்றுள்ளார். ஸ்ரூடியோவிலிருந்து அல்பம் பார்த்துவிட்டு வெளியேறிய போது மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டமை தெரியவந்த நிலையில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்நிலையில் பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (4)

## அரசியல் தீர்வு கோரி இரணைமடுவில் போராட்டம்



(முறிகண்டி)

நிரந்தரமான அரசியல் தீர்வை வலுயுறுத்தி இடம்பெற்றுவரும் நூறு நாள் செயற்றிட்டத்தில் 50 ஆவது நாளான நேற்றைய தினம் கிளிநொச்சி இரணைமடுக்குளம் அமைந்துள்ள பகுதியில் போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் பயங்கரவாத தடைச்சட்டத்தினை உடன் நிறுத்து, கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல், இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (4-100)

## தென்னங்கன்றுகளை வெட்டி வீசிய விசமிகள்

(கருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு நாச்சிக்குடா பகுதியில் மதுபோதையில் வந்த விசமிகளால் பத்துக்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகள் வெட்டி வீசப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு காணி உரிமையாளர் வழங்கிய தகவலுக்கு அமைய புதுக்குடியிருப்பு பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர். (4-316)




## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1
கி.பா: சூரி 12செவ் 9 இல்
உயரம்: 175 cm
தகைமை/தொழில்:- Civil Engineering (HND) TO
எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ : B/12965

பிறப்பு: 1989இந்து
நட்சத்திரம்:சித்திரை 1
கி.பா: சூரி 1 செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L (மரக்காலை உரிமையாளர்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12967

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: சூரி 2 செவ் 3 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc Civil Engineer (UK)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் விவாகரத்தானவர்
தொ.இ: B/12968

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம் 2
கி.பா: 53 சூரி 10 செவ் 2 இல்
தகைமை/தொழில்:Own Grocery Shop, சொந்தக்கட்டடங்கள் வாடகைக்குகொடுக்கப்பட்டுள்ளன.
எதிர்பார்ப்பு :சாதாரணபடித்தமணமகள்
தொ.இ: B/12972

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:2000 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: சூரி . செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:அரச தொழில் அல்லது வெளிநாடு
தொ.இ:G/12984

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: 35 சூரி 10 செவ் 11 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்: சித்த வைத்தியம் இறுதி ஆண்டு மாணவி
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/12986

பிறப்பு: 1994இந்து
நட்சத்திரம்:சதயம் 4
கி.பா: சூரி 7 செவ் 6 இல்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:BSc (Anri) Hons
எதிர்பார்ப்பு: தகுதியான வரன் உள்நாடு மட்டும்
தொ.இ:G/12987

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 3
கி.பா: சூரி 7செவ் 3 இல்
தகைமை/தொழில் :BSc Asst.Lecturer
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ:G/12991

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 300 | 300 | 280 |
| உருளைக்கிழங்கு | 300 | 300 | 280 | 320 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 300 |
| தக்காளி | 180 | 220 | 200 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 280 | 280 |
| கோவா | 400 | 400 | 450 | 450 |
| கரட் | 300 | 360 | 400 | 400 |
| பூசணி | 140 | 130 | 340 | 200 |
| புடோல் | 120 | 200 | 120 | 200 |
| வாழைக்காய் | 200 | 160 | 140 | 140 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 180 | 180 |
| பாகற்காய் | 400 | 700 | 700 | 700 |
| வெண்டிக்காய் | 160 | 200 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 190 | 200 | 300 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 | 150 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 250 |
| பீற்றூட் | 200 | 160 | 180 | 250 |
| கறிமிளகாய் | 600 | 650 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 700 | 450 |
| போஞ்சி | 550 | 400 | 700 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 350 | 350 |
| முள்ளங்கி | 120 | 180 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 140 | 120 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிதாக...

அறிவித்துள்ளது.

நாட்டில் ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்து 20 வருடங்கள் நிறைவடைந்ததையொட்டி, நாரஹேன்பிட்டி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோது, லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் பணிப்பாளர் விஃபான் குமார் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)

## பாராளுமன்றில்...

கட்சி பாராளுமன்றத்தில் முன் வைக்கவுள்ளதுடன் அது தொடர்பான விவாதம் இன்று மாலை 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

அதன்படி இன்று காலை 10 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளது. (ம-7)

## இலங்கைக்கு...

சுகாதாரம், கல்வி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றில், இலங்கையின் வெற்றிகள், தற்போதைய நெருக்கடியால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதென ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி, டுவிட்டர் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் மருத்துவப் பொருட்களில் நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் இலங்கைக்கு, அதன் நண்பர்கள் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என ஹனா சிங்கர் அழைப்பு விடுத்துள்ளார்.

நன்கொடை வழங்க விரும்புவோர், www.undp.org/srilanka/donate என்ற இணையத்தளத்துக்கு பிரவேசித்து, நன்கொடையை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தியாக தீபம்...

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்ள பொதுக் கட்டமைப்பொன்றினை உருவாக்கி முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் தொடர்ச்சியாக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

கடந்த கூட்டத்தில் பொதுக் கட்டமைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டு ஏழு பேர் கொண்ட பொதுக் கட்டமைப்புக்கான அழைப்பாளர் குழு தெரிவு செய்யப்பட்ட நிலையில் அந்தக் குழு, கலந்துரையாடலில் பங்கேற்காத அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்பனவற்றுடன் கலந்துரையாடி பொதுக் கட்டமைப்பை உருவாக்கி நினைவேந்தலை சிறப்பாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டநிலையில், மதகுருமார்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், அரசியல் கைதிகளுக்கான அமைப்பின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள் என 15 பேரைக் கொண்ட பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## தமிழர்களுக்கு...

தினம் சுவிட்சர்லாந்து - ஜெனிவாவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை நேரப்படி நேற்றைய தினம் பி.ப 6 மணியளவில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது யுத்தத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டமானது சுவிட்சர்லாந்தில் வசிக்கும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டது.

ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் இந்த காலப்பகுதியில் இந்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் புலிக்கொடியை கையில் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,104)

## விடைபெற்றார்...

ஐக்கிய இராச்சியத்தை மிக நீண்ட காலம் (70 வருடங்கள்) ஆட்சி செய்தவர் என்ற பெருமைக்குரிய, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு, பூரண அரச மரியாதையுடன் லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில், நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட 500க்கு மேற்பட்ட வெளிநாட்டுத் தலைவர்களும் வெளிநாடுகளின் முக்கிய பிரதிநிதிகளும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டதுடன், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டார்.

தனது பாரியார் மைத்ரீ விக்கிரமசிங்க மற்றும் இலங்கைத் தூதுவருடன் மகாராணிக்கு ஞாயிற்றுக்கிழமை இரவு வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையில் வைத்து, ஜனாதிபதி ரணில் இறுதி அஞ்சலி செலுத்தியிருந்தார். (ம-7)

## பயங்கரவாத...

பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மதகுருமார்கள், மூவின மக்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நெருக்...

கடன் உதவி நெருக்கடிகளுக்கு முழுமையான தீர்வாக அமையாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வாத்துவ - பொதுப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷ அரசாங்கம் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனை பெற்று அதன்மூலம் நாட்டை நெருக்கடிகளில் இருந்து மீட்டெடுக்க முயற்சிக்கிறது.

கடனால் ஏற்படும் நெருக்கடியை கடனால் தீர்ப்பதற்கு முடியுமா? என்பதே எம் அனைவரினதும் கேள்வியாகும் என்றார். (ம-7)

## பொருளாதார...

தற்போதைய அரசாங்கம் நெருக்கடியை சமாளிக்க பல நாடுகளின் ஆதரவை பெற்று வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், அரசியல் நலன்களுக்காக ஒரு சில தரப்பினர் சர்வதேச அமைப்புகளின் தலையீட்டை நாடுவதாக பிரதமர் குறிப்பிட்டார். (ம-7)


தன நிதானய
திகதி - 2022.09.19
சீட்டிழுப்பு இலக்கம் - 913
I 29 43 64 69

மஹஜன சம்பத
திகதி 2022/09/19
சீட்டிழுப்பு இலக்கம் 4883
U 2 9 3 3 5 5

ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2022.09.19
சீட்டிழுப்பு இலக்கம் 192
03 07 16 56

மெகா பவர்
திகதி 19/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1231
I 26 13 20 22 77

கொவிசெத
திகதி 2022.09.19
சீட்டிழுப்பு இலக்கம் 3125
E 06 07 41 46

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1338
தனுசு 1 7 7 8 6 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1858 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.09.19 தினம் திங்கட்கிழமை
Y 14 58 69 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,314,100/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.09.19
சீட்டிழுப்பு இல : 4019
வர்ணம் : நீலம்
ரூ. 2,937,080/-
வெற்றி இலக்கங்கள் 02 09 57 67 T

ராசி
ரூ. 4,962,043.80
திகதி 2022-09-19
வெற்றி வாரம் 3570
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 19 20 25 56
ரூ. 12,420,903.80

26 கோடி
N 01 09 20 58 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 261,852,643/-
1034
2022.09.19
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1854
சீட்டிழுப்பு திகதி 2022-09-19
வெற்றி இலக்கங்கள் 20 56 57 69 L
ரூ. 35,538,796/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1684
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.09.19
ரூ. 4,084,500/-
23 36 58 67 U


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச விசா வாய்ப்பு

அமெரிக்க லொத்தர் விசா

அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா?

(C-4921)

!!அலட்சியம் வேண்டாம்!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள் PASSPORT அவசியம்.

எம்மூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

V2 TRAVELS 0768226244 0768226240



## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

(C-4921)

விசா சேவைகள் V2 TRAVELS

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 30,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -35,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 6 பரப்பு (நிலப்பரப்பு)**

**காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 ½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 ½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12830)

**077 658 5999, 076 436 5814, 077 874 8135**



## கிருஷ்ணா அடைவு கடை

பதிவு இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2021 ஆம் ஆண்டு 30.09.2021 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2022 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி (20.10.2022) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 20.10.2022 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு : 2021ஆம் ஆண்டு 9 ஆம் மாதம் 30ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும். விற்கப்படும்.**

**இல. 370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 490 0311**
**021 222 5180**

(12788)

**உரிமையாளர்**
**இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5046**



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை - நல்லையம்பதி

## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின்

ஈஷான பாகத்தில் அமைந்துள்ள

**சிங்காரவேலவன் சிவகாயத்திரி சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானம்**

**மஹாளய அனுஷ்டானமும் திருவாசக முற்றோதலும்**
**20.09.2022 செவ்வாய்க்கிழமை**

யாழ்ப்பாண மண்ணை ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களின் ஆத்ம சாந்தி வேண்டியும் சுனாமியால் காவுகொள்ளப்பட்ட உயிர்களின் ஆத்மசாந்தி வேண்டியும் இன்றைய தின வழிபாடுகள் நடைபெறும். குறித்த வழிபாட்டிலே ஆத்மசாந்தி வேண்டி திருவாசக முற்றோதல் சிறப்பாக எம் பெருமானுக்கு விண்ணப்பம் செய்யப்படும். அடியவர்கள் குறித்த வழிபாட்டில் பங்குபற்றி தமிழ் மன்னர்களினதும் சுனாமியால். காவு கொள்ளப்பட்டவர்களினதும் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்து பித்ருக்களின் தோசம் நீங்க வழியேற்படுத்தி கொள்வீர்களாக.

**திருவாசக முற்றோதல் ஆரம்பம் காலை 5.00 மணி**
**கும்பபூஜை காலை 9 மணி, விஷேட அபிஷேகம் காலை 9.30 மணி**
**விஷேட பூஜை பகல் 11.00 மணி, மகேஸ்வர பூஜை அன்னதானம் ந.ப 12 மணி**

குறிப்பு:- 11.09.2022 மஹாளய பட்சம் ஆரம்பமாகி தினமும் அபிஷேக பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. குறித்த வழிபாடு 25.09.2022ஆம் திகதியன்று ஏகாதச ருத்ர மஹாயாகம் நடைபெற்று நிறைவடையும் குறித்த காலங்களில் அடியவர்கள் தமது மூதாதையர்களுக்கு பிண்டம் இட்டு, தர்ப்பணம் செய்து நெய்தீபம் ஏற்றி, மோட்ச அர்ச்சனை செய்து தங்களது கரத்தினால் தர்ப்பண லிங்கேஸ்வரப் பெருமானுக்கு ஜல அபிஷேகம் செய்து மஹாளய அனுஷ்டான பிதிர்க்கடன்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும்,

**மஹாளய 10ஆம் பூஜை உபயம்**
**நியூரங்கனாஸ் ஜூவல்லறி**
**நியூரங்கனாஸ் ஹோம்டெவலப்ஸ், கனடா** (C-4947)

**இங்ஙனம்**
**தர்மபரிபாலன சபை**


# தியாகி திலீபனின் நினைவேந்தல் மக்கள் எழுச்சியாக முன்னெடுக்கப்படும்

## வேலன் சுவாமிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இம்முறை தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வானது மக்களின் எழுச்சியாக மக்களின் புரட்சியாக முன்னெடுக்க தீர்மானித்திருக்கின்றோம் என தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் நேற்று நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபன் அவர்களுடைய நினைவேந்தலை முன்னெடுக்கும் முகமாக தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனைவரும் ஒன்று இணைந்து ஒற்றுமையாக இந்த நினைவேந்தலை ஒரு மக்கள் எழுச்சியாக புரட்சியாக முன்னெடுக்கும் விதமாகவே தியாக தீபம் நினைவேந்தலினை ஒழுங்கு செய்கின்ற ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது

அந்த நிகழ்வினை முன்னெடுக்கின்ற பொது கட்டமைப்பதற்காக நாங்கள் தியாக தீபம் திலீபனுடைய நினைவுகளில் எந்த வித முரண்பாடும் இன்றி யாரும் எந்தவித சுய லாபத்திற்கும் இதனை பயன்படுத்தாத விதத்திலே ஒட்டுமொத்த தமிழினமாக விடுதலைக்கான பயணமாக முன்னெடுப்பதற்காக நாங்கள் அனைத்து முயற்சிகளையும் இதய சுத்தியோடும் இலட்சியப்பற்றோடும் முன்னெடுக்க இருக்கின்றோம்

நினைவேந்தல் இம்முறை மிகவும் சிறப்பாக இடம்பெறவேண்டும் எங்களுடைய உறவுகள் அனைவரும் இதற்கு முழுமையான ஆதரவை தரவேண்டும் மிக எழுச்சியாக அனைவரும் இம்முறை இந்த எழுச்சியினை காட்டவேண்டும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். என்ற கோட்பாட்டுக்கு அமைய மக்களுடைய எழுச்சி எப்பொழுது ஏற்படுகின்றதோ எங்களுடைய விடுதலை இனத்தினுடைய விடுதலை அனைத்துமே சாத்தியமாகும் என்பது தான் நிதர்சனமான உண்மைஅந்தஅடிப்படையிலே இந்த பொது கட்டமைப்பு செயல்பட்டு திலீபனின் நினைவேந்தலை மிக சிறப்பாக நினைவு கூறும் என கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றார். (ம-7)


## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Visa Extension

இலங்கை விசா நீட்டித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12808)

**076 825 7716** (ஆகாஸ்)



## வேலைவாய்ப்பு

யாழ்.நகரை அண்மித்து ஆரம்பிக்கப்படவுள்ள உணவகத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

1. சமையற்காரர் (Chef)
2. ரொட்டி மேக்கர் (Rotti Maker)

✱ தங்கி நின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.

(12829)

தொடர்பு:- **077 199 7206**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 02 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியில் இருந்து 750M தூரத்தில்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- 20 அடி பாதையுடன்

(12830)

**076 755 8606**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இருபாலையில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- ❖ பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்.
- ❖ 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
- ❖ BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்.
- ❖ 18 அடி பாதையுடன் நல்ல சூழல் நன்நீர் ஊற்று நிலம்.
- ❖ யாழ். நகரில் இருந்து 4 km தூரம்.
- ❖ 1 பரப்பின் விலை (600,000/=) ரூபா ஆறு இலட்சம்.
- ❖ பார்வையிடும் நேரம் காலை 9.00 இருந்து மாலை 6.00 மணி வரை.

(12830)

**077 288 0152, 077 148 8348**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org